## கழக அமைப்பு ரீதியாக நாம் ஒவ்வொருவரும் பல அணிகளாகப் பிரிந்து இருந்தாலும்,

# நாம் அனைவரும் கலைஞர் அணி - நம் தலைவர் அணி என்பதை மனதில் வைத்து செயல்பட்டு, வென்று காட்டுவோம்!

## தென்காசியில் நடைபெற்ற கழக சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!




தென்காசி,மார்ச்.8-

**தென்காசி மாவட்டம், இலஞ்சி ட்ரீசில் எலைட் மஹாலில், தென்காசி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டங்களுக்கு உட்பட்ட தி.மு.கழக சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``நாம் ஒவ்வொருவரும் பல அணிகளாக, `இளைஞர் அணி', `மாணவர் அணி', `மகளிர் அணி', `தகவல் தொழில்நுட்ப அணி' இப்படி ஒவ்வொன்றாகப் பிரிந்து இருந்தாலும், நம் மனத்தில் இருக்க வேண்டியது நாம் அனைவரும் ஒரே அணி, அது கலைஞர் அணி, நம் தலைவர் அணி என்பதை மட்டும் அடுத்த 40 நாட்கள் நம் மனதில் வைத்துக்கொண்டு நம் பிரச்சாரத்தை அழகாக வியூகம் அமைத்தோம் என்றால், நிச்சயம் மீண்டும் ஏழாவது முறையாக நம் கழகம் ஆட்சி அமைக்கப்போவது உறுதி" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

இன்று தென்காசி வடக்கு மற்றும் தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் உங்களையெல்லாம் சந்திப்பதில் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இன்று தமிழ்நாட்டின் வரலாற்றில் மிக மிக முக்கியமான ஒரு நாள். 1967-ஆம் ஆண்டு இதே மார்ச் 6-ஆம் தேதிதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நம் கழகம் முதன்முதலாக ஆட்சிப் பொறுப்பேற்றது. அண்ணா அவர்கள் முதல்முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த நாளில், மீண்டும் நாம் அனைவரும் திராவிட மாடல் 2.0 அரசு அமைப்பதற்கான அந்த உறுதிமொழியை இங்கே இந்த அரங்கில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### தொடர் சுற்றுப்பயணம்

நேற்று காலையில் சென்னையிலிருந்து புறப்பட்டு, தஞ்சாவூரில் ஒரு திருமண நிகழ்ச்சி, அதை முடித்துவிட்டு அங்கிருந்து மதுரைக்குச் சென்று மதுரையில் அரசு நிகழ்ச்சி, அதை முடித்துவிட்டு அங்கிருந்து நெல்லைக்கு வந்து அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகளிலெல்லாம் கலந்துகொண்டு நேற்று இரவுதான் தென்காசிக்கு வந்தேன். இந்தத் தொடர் சுற்றுப்பயணம் சாலை வழியாகவே அமைந்தது. தொடர் சுற்றுப்பயணம் காரணமாகக் கொஞ்சம் சோர்வாக, அசதியாகத்தான் இருந்தேன். ஆனால், இங்கே தென்காசி வந்து உங்களையெல்லாம் பார்க்கும்போது, உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது, உங்களின் வரவேற்பைப் பார்க்கும்போது தானாகவே ஒரு புத்துணர்ச்சி கொடுத்தது போன்ற ஆற்றல் வந்துவிட்டது. என் சோர்வெல்லாம் இன்று மறைந்து போனது. இன்று உங்களையெல்லாம் சந்தித்துவிட்டு, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளப் போகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைப் பற்றிப் பேசும்போது நாம் தொடர்ந்து பேசுவோம், சொல்வோம். கலைஞருக்கு இருக்கின்ற பெருமை எந்தத் தலைவருக்குமே கிடையாது. தமிழ்நாட்டில் மட்டும் இல்லை, இந்தியாவில் மட்டும் இல்லை, உலகத்திலேயே எந்தத் தலைவருக்கும் கிடையாது அந்தப் பெருமை. அது என்னவென்றால், தான் நின்ற தேர்தல் - நம் கழகம்கூட வெற்றி வாய்ப்பை இழந்திருக்கலாம் - ஆனால், கலைஞர் அவர்கள், தான் நின்ற தேர்தல் அனைத்திலும் வென்ற ஒரே தலைவர் நம் கலைஞர் அவர்கள் மட்டும்தான்.

நம் தலைவருக்கும் ஒரு பெருமை இருக்கிறது. தான் தலைவராகப் பொறுப்பேற்று, தான் சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றிபெற்ற ஒரே தலைவர் நம் தலைவர். இப்படிக் கழகம் தொடர்ந்து, நம் தலைவர் தலைமையில் சந்திக்கின்ற அத்தனை தேர்தல்களிலும் தொடர் வெற்றி.

### உங்களின் பங்களிப்பு

இன்று நம் திராவிட முன்னேற்றக் கழகம் 76-வது ஆண்டில் நாம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். பவள விழா முடிந்து இன்று நம் கழகத்திற்கு வயது 76. இந்த 76 வயதிலும் அதே இளமையோடு, அதே துடிப்புடன் களத்தில் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்றால், அதற்கு மிக மிக முக்கியமான காரணம் இங்கே வந்திருக்கக்கூடிய அனைத்து அணிகளின் நிர்வாகிகளாகிய நீங்கள்தான். உங்களின் பங்களிப்பு மிக மிக முக்கியம். அதனால்தான் நம் முதலமைச்சர் அவர்கள் நான் தொடர்ந்து இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நடத்துவது உங்களுக்குத் தெரியும். கிட்டத்தட்ட மூன்று நிர்வாகிகள் சந்திப்பை மாநாடு மாதிரி நடத்தி முடித்துவிட்டோம். வடக்கு, கிழக்கு, மேற்கு மண்டலங்களை முடித்துவிட்டோம், தெற்கில் இங்குள்ள மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் வந்தார்கள். திருவண்ணாமலை முடித்துவிட்டு, கோயம்புத்தூரிலும் முடித்துவிட்டோம். மேற்கு மண்டலத்தையும் முடித்துவிட்டோம். டெல்டா பகுதி மட்டும் நடத்தவில்லை.

### சார்பு அணிகளுக்கு முக்கியத்துவம்

இன்றுகூட இளைஞர் அணி நிர்வாகிகளைச் சந்திக்கும்பொழுது என்னிடம் குறை சொல்வார்கள், `எங்களையெல்லாம் சந்திக்கவே இல்லை, தனித்தனியாகப் புகைப்படம் எடுத்துக்கொள்ளவே இல்லை, எங்களுக்குச் சந்திப்பதற்கான வாய்ப்பு கொடுங்கள்' என்று. நான் இப்படி எந்த மாவட்டத்திற்குப் சென்றாலும் இளைஞர் அணி நிர்வாகிகளை ஒரு செயலாளராக சந்திப்பது, அவர்களோடு கலந்துரையாடுவது வழக்கமாக வைத்திருந்தேன். ஆனால் தலைவர் அவர்கள் என்னை அழைத்து, இல்லை இனிமேல் எந்த மாவட்டத்துக்குப் சென்றாலும் நீ இளைஞர் அணியை மட்டும் கவனிக்கக் கூடாது, எல்லா அணிகளையும் நீ சந்திக்க வேண்டும் என்று உத்தரவிட்டுத் தலைவரின் அனுமதி பெற்றுத்தான் நான் இங்கே உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன். நம் தலைவர் அவர்கள் சார்பு அணிகளுக்கு எப்பொழுதும் முக்கியத்துவத்தை நம் தலைவர் அவர்கள் கொடுப்பார். எனவே பொதுவாக அணிகளை `விங்ஸ்' (WINGS) என்று சொல்வோம். யூத் விங், ஸ்டூடண்ட் விங் என்று. பொதுவாக, `விங்ஸ்' என்றால் தமிழில் `சிறகுகள்' என்று அர்த்தம். இன்று கழகம் வெற்றி மேல் வெற்றி பெற்று அது உயர உயரப் பறந்து கொண்டிருக்கிறது என்றால், இங்கே வந்திருக்கக்கூடிய கழகத்தின் அணிகள் நீங்கள்தான். உங்களின் உழைப்பு அதற்கு மிக மிக காரணம்.

இன்னும் சொல்லப்போனால், சார்பு அணிகள் என்பது நம் தாய்க் கழகத்திற்குப் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சிக்களம். முதன்மை ஆட்டத்துக்கு முன்னால் `வலைப்பயிற்சி' எடுப்பார்கள். அது போல நம் அணிகளில் பணியாற்றுவது நம் தாய்க் கழகத்தில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சி களமாக இன்றைக்கு இந்த அணிகள் எல்லாம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அணிகளில் சிறப்பாகச் செயல்பட்டவர்கள் இன்று கழகத்தின் முக்கியமான பொறுப்புகளில், மாவட்டப் பொறுப்பாளர்கள், அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்களாக, சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இன்று தாய்க் கழகத்தில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டின் முதலமைச்சரைக் கொடுத்தது, கழக இளைஞர் அணி. கழகத்தின் தலைவரைக் கொடுத்தது இளைஞர் அணி. கழகத்தின் பொதுச்செயலாளரைக் கொடுத்தது கழகத்தின் மாணவர் அணி. இப்படி பொதுவாக ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒரு வரலாறு உண்டு. தி.மு.க-வில் மட்டும்தான் ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு உண்டு.

மாணவர் அணி என்று எடுத்துக்கொண்டால், மாணவர் அணியைத் தவிர்த்துவிட்டு, தமிழ்நாடு சந்தித்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றிப் பேச முடியாது. இளைஞர் அணி என்றால், இன்று இந்தியாவில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன, ஒவ்வொரு இயக்கத்திலும் இளைஞர் அணி இருக்கிறது. ஆனால், இந்தியாவிலேயே முதன்முறையாக இளைஞர் அணியைத் தொடங்கியது தி.மு.க. தான். தி.மு.க இளைஞர் அணிக்கு அந்த வரலாறு இருக்கிறது. உதாரணத்திற்குச் சட்டத்துறை எடுத்துக்கொண்டால் இன்று இந்தியாவிலேயே பல முக்கியமான தீர்ப்புகளைப் பெற்றுத் தந்த பெருமை தி.மு.க-வின் சட்டத்துறைக்கு உண்டு. ஆகவே கழகத்தின் அணிகள் ஒவ்வொன்றிலும் நாம் இருப்பது நமக்கான பெருமை. நிச்சயம் உங்களுக்கெல்லாம் ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன். சார்பு அணிகளில் சரியாக உழைத்துக் கொண்டிருந்தால், நிச்சயம் தலைவர் தகுந்த நேரத்தில் நமக்கான அங்கீகாரத்தை நிச்சயம் கொடுப்பார்.

நீங்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் உங்களின் செல்வாக்கினால், உங்களின் கட்டுப்பாட்டில் தனிப்பட்ட முறையில் ஒரு 50 லிருந்து 60 பேர் நீங்கள் சொல்வதைக் கேட்கிறவர்களாக இருந்தார்கள் என்றால், உங்களின் வளர்ச்சியை யாராலும் தவிர்க்கவோ தடுக்கவோ நிச்சயம் முடியாது.

சார்பு அணிகள் என்று சொல்வதனால், நாம் ஏதோ கட்சியின் மேல், கழகத்தின் மேல் நாம் சார்ந்திருக்கிறோம் என்று அர்த்தம் கிடையாது. அதை மாற்றி கட்சி, கழகம் தான் நம் அணியைச் சார்ந்திருக்கிறது என்கிற நிலைமையை நம் அணிகளின் செயல்பாட்டின் மூலமாக நாம் காட்ட வேண்டும். சார்பு அணிதானே என்று அலட்சியமாக இருந்துவிடக் கூடாது.

இன்று நம் முதலமைச்சர் அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறார். அதில் சில திட்டங்களை மட்டும் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக மகளிருக்கான ஒரு அரசாக, தமிழ்நாடா இல்லை மகளிர் நாடா என்று கேட்கிற அளவுக்கு மகளிருக்கான திட்டங்கள் ஒவ்வொன்றையும் நம் தலைவர் அவர்கள் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டிருக்கிறார்கள். சில திட்டங்களை மட்டும் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று அவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணத் திட்டம். இன்று இந்தத் திட்டத்தைப் பார்த்துப் பல்வேறு மாநிலங்களில் பின்தொடர்கிறார்கள். பல்வேறு மாநிலங்களில் இதே திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கிறார்கள். 960 கோடி பயணங்களை இந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

பள்ளிக்கூடம் படிக்கும் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தைச் செயல்படுத்தினார் நம் முதலமைச்சர் அவர்கள். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் திங்கள் முதல் வெள்ளி வரை ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அரசுப் பள்ளிகள் அனைத்திலும் 22 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகிறார்கள்.

### விமர்சனம் செய்த திட்டம்

இன்று சமீபத்தில் 10 லட்சம் மடிக்கணினிகளைக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கிக் கொண்டிருக்கிறார். இப்படி ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து செய்துகொண்டிருக்கிறார். எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த ஒரு திட்டம், தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன திட்டம், நம்மால் செய்ய முடியாது என்று எதிர்க்கட்சிகள் நம்மை விமர்சனம் செய்த திட்டம், அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்.

நாம் ஆட்சிப் பொறுப்பேற்கும்போது கடும் நிதி நெருக்கடி, செய்யவே முடியாது என்றார்கள். ஆனால் 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி இன்று ஒவ்வொரு மாதமும் நம் தலைவர் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்கி வருகிறார். சென்ற பிப்ரவரி மாதம் எல்லா மகளிருக்கும் ஒரு மிகப்பெரிய வியப்பு. மகளிருக்கு மகிழ்ச்சி, எதிர்க்கட்சிகளுக்கெல்லாம் மிகப்பெரிய ஒரு அதிர்ச்சி.

என்னவென்றால் நம் எதிர்க்கட்சிகள் பா.ஜ.க. கூட்டணி என்ன செய்தார்கள், எப்படியாவது இந்தத் திட்டத்தைத் தேர்தலைக் காரணங்காட்டி நிறுத்த வேண்டும் என்று ஒரு முயற்சி எடுத்தார்கள். பல மாநிலங்களில் நீதிமன்றத்துக்குச் சென்று நிறுத்தியிருக்கிறார்கள். இந்தச் செய்தி நம் முதலமைச்சருக்கு வந்தது. யாரிடமும் சொல்லவில்லை. சென்ற மாதம் காலையில் ஏழு மணிக்கு எழுந்த உடனே 1 கோடியே 31 லட்சம் மகளிர் அவர்களின் கணக்கில் 5,000 ரூபாய் வந்துவிட்டது.

நீ ஒரு மாதம் நிறுத்த முயற்சி செய்கிறாய். நான் 1,000 ரூபாய் கொடுக்கிறதை நிறுத்த முயற்சி செய்கிறாயா, என் மகளிருக்கு நான் 5,000 ரூபாய் கொடுக்கிறேன் என்று பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் அதோடு சேர்த்து கோடை காலத்துக்குக் கூடுதல் சிறப்பு நிதியாக 2,000 ரூபாய் என்று 5,000 ரூபாயை இன்று ஒரு கோடியே 32 லட்சம் குடும்பங்களுக்கு நம் முதலமைச்சர் வழங்கி இருக்கிறார்கள்.

### மும்மொழிக் கொள்கை முயற்சி

இப்படிப் பல்வேறு நலத்திட்டங்களைச் செய்வதால்தான், இன்று இந்தியாவிலேயே நம் தமிழ்நாடு 11.19 சதவிகித இரட்டை இலக்க வளர்ச்சியுடன் இன்று இந்தியாவிலேயே வளருகின்ற மாநிலங்களில் முதல் இடத்தில் நம் தமிழ்நாடு இன்று இருக்கிறது. ஆனால் ஒன்றிய அரசு பார்க்கிறது. நாம் இவ்வளவு தடங்கல்கள் செய்கிறோம், இருந்தாலும் தமிழ்நாடு எப்படி இவ்வளவு சிறப்பாகச் செயல்படுகிறது. அதை எப்படியாவது முடக்க வேண்டும் என்று இன்று நிதி உரிமையைப் பறிக்கிறார்கள், மொழி உரிமையைப் பறிக்கிறார்கள், மாநில உரிமைகள் ஒவ்வொன்றையும் தடுத்து நிறுத்துகிறார்கள். சென்ற வருடம் புதிய கல்விக் கொள்கை என்று ஒன்று கொண்டு வந்தார்கள். மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டன, இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்டன. ஆனால் இந்தப் புதிய கல்விக் கொள்கையை ஆராய்ந்து பார்க்கும்போது, என்ன இருக்கிறது? மீண்டும் தமிழ்நாட்டுக்குள் குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சி. மீண்டும் தமிழ்நாட்டுக்குள் இருமொழிக் கொள்கை இல்லை, மும்மொழிக் கொள்கை என்று சொல்லி இந்தியையும் சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டுக்குள் நுழைப்பதற்கான ஒரு முயற்சி. மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொண்டன ஆனால், தமிழ்நாட்டு முதலமைச்சர் சொல்லிவிட்டார்.

ஒன்றிய அமைச்சர் சொல்கிறார் அவர்கள் நமக்குக் கொடுக்க வேண்டிய நிதிப் பகிர்வு 3,500 கோடி ரூபாய் ஒன்றிய அரசு நமக்குத் தர வேண்டிய தொகையைத் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் முதலமைச்சர் சொல்லிவிட்டார், நீ 3,500 கோடி இல்லை, நீ 10,000 கோடி கொடுத்தாலும் நான் என்றைக்கும் உன்னுடைய புதிய கல்விக் கொள்கையைத் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடமாட்டேன். என் தமிழ்நாட்டு மக்கள் மீது நான் மீண்டும் இந்தியைத் திணிக்க விடமாட்டேன். என் தமிழ்நாட்டு மக்கள் மீது மீண்டும் குலக்கல்வித் திட்டத்தை நான் கொண்டு வரமாட்டேன் என்று சொன்ன ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்.

இன்று மற்ற மாநிலங்கள் இதைப்பற்றிப் பேச ஆரம்பித்திருக்கின்றன. மற்ற மாநில முதலமைச்சர்கள் இப்போது மும்மொழிக் கொள்கையை எதிர்க்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் ஓராண்டுக்கு முன்பே சொல்லிவிட்டார். இன்று ஒன்றிய அரசு ஒரு திட்டம் கொண்டு வந்தால் மற்ற மாநில முதலமைச்சர்கள் முதலில் பார்ப்பது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறார், தமிழ்நாடு என்ன முடிவு எடுக்கிறது என்கின்ற ஒரு நிலைமையை, இன்று நம் முதலமைச்சர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு முன்மாதிரியாக ஏற்படுத்திக் கொடுக்கின்றார்.

இன்று திராவிட மாடல் அரசின் திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டம், எல்லா வீடுகளையும் சென்றடைந்துள்ளது. ஒரு வீட்டில் நிச்சயம் ஒரு பயனாளியாவது இருப்பார்கள். அந்த அளவுக்குத் திட்டங்களை நாம் அமல்படுத்தி இருக்கிறோம்.

### தென்காசி திட்டங்கள்

தென்காசி மாவட்டத்தில் மட்டும் இந்த ஐந்து ஆண்டுகளில் என்னென்ன திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம் என்று பார்ப்போம்.

சங்கரன்கோவில் வட்டத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் அமைக்கப்பட இருக்கிறது.

ஆலங்குளம் முதல் தென்காசி வரையிலான இருவழிச் சாலை இப்போது 254 கோடி ரூபாய் செலவில் நான்கு வழிச் சாலையாக மாற்றுகின்ற திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. அதே மாதிரி திருநெல்வேலி முதல் ஆலங்குளம் வரைக்கும் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலை அமைக்கின்ற பணி நடைபெறுகிறது. பட்டக்குறிச்சியில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது.

பணிபுரியும் பெண்களுக்காக 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தோழி விடுதிகள் இன்று அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி தென்காசி மாவட்டத்தில் ஏகப்பட்ட பணிகளைத் திட்டங்களை நம் அரசு செய்து கொடுத்திருக்கிறது. இது மாதிரியான திட்டங்களால்தான் நம் மாநிலம் இன்று இவ்வளவு பெரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறது. ஆனால், ஒன்றிய அரசு சமீபத்தில் கொண்டு வந்த நிதிநிலை அறிக்கையை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

### முரட்டு அடிமை

இதுவரைக்கும் ஒரு திட்டத்தைக்கூட இந்தப் பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. எப்பொழுதும் வருடந்தோறும் நம் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுகிறது. இந்த வருடம் ஒன்றிய நிதி அமைச்சர் நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் படித்து முடிக்கக்கூட இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் பாராட்டுகிறார். மிகச்சிறந்த பட்ஜெட் என்று. இவர்கள் பட்ஜெட்டை படித்து முடிக்கவில்லை அதற்குள் தமிழ்நாட்டிலிருந்து ஒரு பாராட்டு. அதனால்தான் நான் சொல்வேன். நாம் முரட்டு பக்தர்களைப் பார்த்திருப்போம். ஆனால், இன்று இந்தியாவே ஒரு முரட்டு அடிமையை எடப்பாடி பழனிசாமி அவர்கள் உருவத்தில் இன்று தமிழ்நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

தேர்தல் வந்தவுடன் மோடி அவர்களும் அமித்ஷா அவர்களும் தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு அடிக்கடி வருவார்கள். இப்போது வர ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு வாரத்துக்கு முன்பு மதுரைக்கு வந்திருந்தார்கள் நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் எப்போது மோடி அவர்கள் வந்தாலும் நீங்கள் கவனித்துப் பாருங்கள் இந்தியில்தான் பேசுவார். அதை யாராவது ஒருவர் தவறாக மொழிபெயர்ப்பார்கள். இங்கே இருக்கிற கூட்டம் யாரும் அவர் பேசுவதைக் கேட்பதற்காக அங்கே வரவில்லை, கலைந்து போய்விடுவார்கள். ஆனால், இந்த முறைதான் முதல் முறையாக மோடி அவர்கள் மதுரைக்கு வந்து ஆங்கிலத்தில் பேசி இருக்கிறார். அதாவது இருமொழிக் கொள்கையைத்தான் நாம் ஏற்றுகொள்வது. தமிழ் அல்லது ஆங்கிலம். அவர்கள் இதுவரைக்கும் அதை ஒப்புக்கொண்டதே கிடையாது. மும்மொழிக் கொள்கை, மும்மொழிக் கொள்கை என்று சொன்னார்கள்.

இன்று தமிழ்நாடுதான் மோடி அவர்களையே இங்கே வந்து ஆங்கிலத்தில் பேச வைத்திருக்கிறது. எங்களின் இருமொழிக் கொள்கையையும் நீ தமிழ்நாட்டுக்கு வந்தால் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என்கின்ற அந்த நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்தது நம் தமிழ்நாடு, நம் முதலமைச்சர் அவர்கள். அதுமட்டுமல்ல, அந்த நிகழ்ச்சியில் நடந்ததெல்லாம் நீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள்.

அந்த விழாவின் முகப்பில், தந்தை பெரியாரின் புகைப்படம் முதலில் இடம்பெற்று இருந்தது. மோடி ஒப்புக்கொள்வாரா? அவர்களுக்குப் பெரியார் என்றால் பிடிக்காது. அந்தச் சங்கிக் கூட்டத்திற்குத் தந்தை பெரியாரைப் பிடிக்காது. உடனே அந்த அடிமைக் கூட்டம் என்ன செய்தது, திரு எடப்பாடி பழனிசாமி என்ன செய்தார், பெரியார் புகைப்படத்தை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் மோடியின் புகைப்படத்தை வைத்துவிட்டார்கள்.

இதுதான் இன்று அ.தி.மு.க-வின் நிலைமை. இன்னும் சொல்லப்போனால் அமித்ஷா, மோடி சொல்லிவிட்டார்கள் என்றால், அ.தி.மு.க-வில் இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெயரை மாற்றி, அமித்ஷா திராவிட முன்னேற்றக் கழகம் என்று விரைவில் பெயர் வைத்தாலும் வைத்துவிடுவார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். அப்படிப்பட்ட ஒரு அடிமை நிலையில், இன்று அ.தி.மு.க இருக்கிறது என்பதை நாம் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

### ஆரோக்கியமான ஒரு போட்டி

இங்கே நாம் ஒவ்வொரு அணிகளாக நாம் பிரிந்து வந்திருக்கிறோம். 23 அணிகள் ஒவ்வொரு அணிகளாக வைத்திருக்கிறார்கள் தலைவர். இப்போது சமீபத்தில் சேர்த்ததுதான் விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர் அணி, மாற்றுத் திறனாளிகள் அணி என்று ஒவ்வொரு அணியாக நம் இயக்கத்தில் சேர்த்துக்கொண்டு இருக்கிறோம். ஏன் இத்தனை அணிகள்? ஒவ்வொரு சமுதாய மக்களையும், சமுதாயத்தில் இருக்கக்கூடிய பரந்துபட்டு இருக்கக்கூடிய அனைத்து மக்களையும் நாம் சென்றடைய வேண்டும். அவர்களிடம் தொடர்ந்து நாம் பேச வேண்டும். நம் திட்டங்களைப் பற்றி அவர்களிடம் சொல்ல வேண்டும். நம் கழகத்தின் வரலாற்றை அவர்களிடம் பேச வேண்டும் என்கிற நோக்கத்தோடுதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இனிமேல் அடுத்து வர இருக்கக்கூடிய 40 நாட்கள் ஒவ்வொரு அணிக்குள்ளும் ஒரு ஆரோக்கியமான ஒரு போட்டி இருக்க வேண்டும். எந்த அணி இந்தத் தேர்தலின் வெற்றிக்கு மிகச்சிறப்பாகச் செயல்பட்டது?

நம்ம அணியா அல்லது அந்த அணியா என்கின்ற ஒரு ஆரோக்கியமான போட்டி நமக்குள்ளே இருக்க வேண்டும். உங்களுக்குள்ளே அந்தப் பொறுப்புகளை எல்லாம் பிரித்துக்கொள்ளுங்கள். உங்களுக்குள்ளே ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு அணி நிர்வாகிகளும் மிக மிக பொறுப்புடன் செயல்பட வேண்டும். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பொது வெளியில் மக்களுடன் பேசும்போது அனைவரிடமும் பொதுமக்கள் இடத்திலும் நெருங்கிய நேரடித் தொடர்பில் இருங்கள். அவர்களின் பிரச்சனையைச் செவி கொடுத்துக் கேளுங்கள். நம்மால் நிச்சயம் செய்ய முடியும் என்றால் செய்து முடித்துக் கொடுங்கள். இல்லை என்றால் நமக்கு மேலே இருக்கக்கூடிய பொறுப்பாளர்கள், அமைப்பாளர்கள் அவர்களின் கவனத்துக்கு இதை எடுத்துச் சென்று செய்து கொடுப்பதற்கான அந்த முயற்சிகளில் நீங்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றுவிட்டோம் என்றால், நிச்சயம் பாதி வெற்றியை நாம் அடைந்துவிடுவோம்.

### 200 க்கும் அதிகமான தொகுதிகள்

நம் தலைவர் நமக்கு இலக்கு கொடுத்திருக்கிறார், வெல்வோம் 200, படைப்போம் வரலாறு என்று இலக்கு கொடுத்திருக்கிறார். நான் தொடர்ந்து சுற்றுப்பயணத்திலேயே இருப்பவன், மக்களைத் தொடர்ந்து சந்திப்பவன். எனக்குக் கிடைக்கக்கூடிய வரவேற்பு, எழுச்சி இதெல்லாம் பார்க்கும்போது, பொதுமக்கள் வரவேற்பு எழுச்சியெல்லாம் பார்க்கும்போது நிச்சயம் அடுத்த 40 நாட்கள் சார்பு அணிகளைச் சேர்ந்த நாம் களத்தில் இறங்கி நம் வேலையைச் சரியாகச் செய்தோம் என்றால், நம் பிரச்சாரத்தை ஒழுங்காகச் செய்தோம் என்றால் நிச்சயம் 200 அல்ல, 200 க்கும் அதிகமான தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயம் வெற்றி அடையும். அதை செய்து காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இங்கு வந்திருக்கக்கூடிய உங்களிடம் நான் வைக்க வேண்டிய ஒரே ஒரு கோரிக்கை. ஒன்றிய கழகச் செயலாளர்கள், நகரக் கழகச் செயலாளர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் ஒரேயொரு வேண்டுகோள்.

புதிதாக வந்திருக்கக்கூடிய அணிகள். அணிகளில் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய நிர்வாகிகள் புதியவர்களாக இருப்பார்கள். பொது வாழ்விற்கு முதல் முறையாக வந்திருப்பார்கள். அவர்கள் ஏதாவது ஆர்வக்கோளாறில் ஏதாவது ஒரு சின்ன தவறு செய்துவிட்டால்கூட தயவுசெய்து அவர்களைத் தண்டித்துவிடாதீர்கள். அவர்களை நீங்கள் வழிநடத்துங்கள். உங்கள் அணிகளின் பணிகள் எப்படி இருக்க வேண்டும், தாய்க்கழகத்துக்கு நீங்கள் எந்த வகையில் துணையாக இருக்க வேண்டும் என்று அவர்களுக்கு நீங்கள் கற்றுக்கொடுங்கள். ஏனென்றால், இங்கே இருக்கக்கூடிய ஒன்றிய கழகச் செயலாளர், நீங்கள் எல்லாம் ஏதாவது ஒரு அணியிலிருந்து பயிற்சி எடுத்துவிட்டுத்தான் அங்கே சென்றிருப்பீர்கள். எனவே நாம் ஒவ்வொருவரும் பல அணிகளாக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி இப்படி ஒவ்வொன்றாகப் பிரிந்து இருந்தாலும், நம் மனத்தில் இருக்க வேண்டியது நாம் அனைவரும் ஒரே அணி, அது கலைஞர் அணி, நம் தலைவர் அணி என்பதை மட்டும் அடுத்த 40 நாட்கள் நம் மனத்தில் வைத்துக்கொண்டு நம் பிரச்சாரத்தை அழகாக வியூகம் அமைத்தோம் என்றால், நிச்சயம், மீண்டும் ஏழாவது முறையாக நம் கழகம் ஆட்சி அமைக்கப் போவது உறுதி.

இரண்டாவது முறையாக நம் தலைவர் அவர்கள் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டும் என்றால், இங்கே வந்திருக்கக்கூடிய சார்பு அணி நிர்வாகிகள் நம் பணி அடுத்த 40 நாட்கள் களத்தில் தெரிய வேண்டும். அதை நிச்சயம் நீங்கள் செய்து காட்டுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த மாவட்ட நிர்வாகத்துக்கும் வந்திருந்த அனைத்துச் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாவட்டக் கழகச் செயலாளர் ஜெயபாலன், ஆவுடையப்பன், ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், முன்னாள் அமைச்சர்கள் பூங்கோதை ஆலடி அருணா, தங்கவேலு, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் செல்லதுரை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்குமார், முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளர் ஆறுமுகச்சாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முத்துச்செல்வி, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் அப்துல் காதர், மருத்துவர் செண்பகவிநாயகம், யு.எஸ்.டி.சீனிவாசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணா, முகேஷ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.